21.12.2023
O.S.No.357/2021

வா. சா. 1 வரலட்சுமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

பாட்டன் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் கொஞ்சம் தெரியும். நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். என் பெற்றோர்களுக்கு நான்கு மக்கள். ஜெயராஜ், ஜெகநாதன், நான், வெள்ளையம்மாள் ஆகிய நான்கு பேர்கள். 2 முதல் 5 வாதிகள் ஆகியோர்கள் என் சகோதரி வெள்ளையம்மாளின் மக்கள். 6ம் வாதி என் அக்கா வெள்ளையம்மாளின் மருமகள். 7 முதல் 9 வாதிகள் 6ம் வாதியின் மக்கள் ஆவார்கள். இறந்துபோன என் சகோதரி வெள்ளையம்மாள் அரசு பள்ளியில் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டார். அவர் திருமண நாளில் இருந்து வத்தலக்குண்டில்தான் வசித்து வந்தார். என் தகப்பனார் என் சகோதரி வெள்ளையம்மாளுக்கு சகலவிதமான சீர்வரிசை செய்து திருமணம் செய்துவைத்தார் என்றால் இல்லை. என் தகப்பனார் என் சகோதரி வெள்ளையம்மாளுக்கு வத்தலக்குண்டில் வீடு கட்டி கொடுத்து அவர் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. 2ம் வாதி வத்தலக்குண்டில் வசிக்கிறார் என்றால் திண்டுக்கல் தேனி ஆகிய ஊர்களில் வசித்து வந்தார். 3ம் வாதி திருப்பூரில் இருந்து வருகிறார். 4ம் வாதி அன்புராஜ் போடியில் வசிக்கிறார். 5ம் வாதி ராஜதுரை வத்தலக்குண்டில் குடியிருந்த ரியல் எஸ்டேட் செய்கிறார் என்றால் சரியல்ல. வீட்டில்தான் இருக்கிறார். 6 முதல் 9 வாதிகள் சென்னையில் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. திண்டுக்கல்லில் இருக்கிறார்கள். எனக்கும் அணைப்பட்டியைச் சின்னச்சாமிக்கும் 1973ம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சரிதான். எங்கள் திருமணம் பெற்றோர் சம்மதத்துடன்தான் நடந்தது. என் கணவர் அந்த ஊரில் டீ

மாஸ்டராக வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் என் கணவரது ஊரில் 6 மாதம் வசித்தேன் என்றால் சரியல்ல. 9 மாதம் இருந்தேன். அதன் பின்பு நானும் என் கணவரும் என் தகப்பனாருடன் கொடைரோட்டில் வசித்து வந்தோம். என் கணவருக்கு போதிய வருமானம் வரவில்லை என்பதால்தான் கொடைரோட்டுக்கு வந்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் 1981ம் வருடம் இறந்துவிட்டார். என் அப்பா உயிருடன் இருக்கும்போது என் சகோதரர்கள் ஜெயராஜ், ஜெகநாதனிடம் தாவாச்சொத்தை ஆளுக்கு பாதியாக பிரித்துக்கொள்ளும்படியும், எனக்கு இடம் வாங்கி இடம் வாங்கி வீடு கட்டி கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார் என்றால் சரியல்ல. தற்போது நான் வசிக்கும் வீட்டின் இடம் என் பேரில் உள்ளது என்றால் சரிதான். என் கணவர் சம்பாதித்து கட்டிய வீடு. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றாலும் நான் குடியிருந்து வரும் வீடு என் சகோதரர்கள் என் தகப்பனார் சொன்னது போல் இடம் வாங்கி எனக்கு வீடு கட்டி கொடுத்தார்கள் என்றாலும் என் கணவருக்கு சம்பாதித்து வீடு கட்டும் அளவிற்கு வருமானம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடும் தாவாச்சொத்தும் அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் ஒருதட்டு கிராமம் அம்மாபட்டியில் வசிக்கிறேன் என்றால் சரிதான். என் கிராமத்தில் திருவிழ சீட்டு போடும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. தாவாச் சொத்தை என் சகோதரர்கள் இருவரையும் என் தகப்பனார் பிரித்துக் கொள்ளும்படி சொன்னார் என்றும், என் சகோதரர்களுக்குள் யார் எந்த பகுதியை வைத்துக்கொள்வது என்று தகராறு இருந்து வந்தது என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் இருவருக்கும் தகராறு இருந்தது என்றும், அதனால் ஊர்க்காரர்கள் 1986ம் ஆண்டு திருவிழ சீட்டு போட்டு பிரித்துக்கொடுத்தனர் என்றால் சரியல்ல. நான் அதே ஊரில்தான் இருக்கிறேன். அவ்வாறு பிரித்தது எனக்கு தெரியாது. 1995ம் ஆண்டு திருவிழ சீட்டு மூலம் பிரித்து அனுபவித்து வந்த சொத்தை இருவரும்

பாகப்பிரிவினை பதிந்து பிரித்துக்கொண்டனர் என்றால் எனக்கு தெரியாது. 2005 ம் வருடம் நான் என் சகோதரர்களுக்கு பாகம் வேண்டும் என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கு என் சகோதரர்கள் பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை.

வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.12.21 18:20:02 +0530

Principal District Judge,
Dindigul.